Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 71
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கிலக சித்திரை 10 முஹறம் 23 திங்கட்கிழமை (22-4-68

**ஈழநாடு சந்தா**

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 14-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 26-00 |
| ஒரு வருடம் | — | ரூ. 50-00 |

வாரப்பதிப்பு மாத்திரம்

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 4-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | — | ரூ. 14-00 |

முற்பணம் கட்டவேண்டும்.
தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

இ. போ. சபையிலுள்ள

# 'மேலதிக ஊழியரை உடன் நீக்கவேண்டும்'

## பஸ் கட்டண குறைப்புக்கு பிரயாணிகள் யோசனை

### புதிதாக ஊழியர் எடுப்பதற்கும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

**இ. போ. ச. வில் கூடுதலான ஊழியர்கள் இருப்பதாக பிரதமரே தெரிவித்துள்ளார். எனவே புதிய ஊழியர்களை எடுப்பதை நிறுத்துவதோடு மட்டுமல்ல து கூடுதலான ஊழியர்களை உடனடியாக வேலையிலிருந்தும் நீக்கவேண்டும். இப்படிச் செய்தால் பஸ் கட்டணத்தை குறை கமுடியும்.**

**இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. போ. ச. பஸ் பிரயாணிகள் விபத்து விசாரணைக் குழுவின் முன்னர் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. பிரொட், இ. அலெஸ் முன்னிலையில் நடைபெற்ற விசாரணைக்குழுவில் திரு. இ. எஸ். ஸ்ரீமானே, திரு. பி. சங்கரப்பிள்ளை திரு. பி. ஆர். பி. குணவர்த்தன, பி. டி. அபயபாலா ஆகியோரும் இவ் விசாரணைக் குழுவில் அங்கம்வகித்தார்கள்.

பஸ் பிரயாணிகளிடமிருந்து கட்டணத்தைக் குறைவாகப் பெற மேலதிகமாக இருக்கும் இ.போ.ச. ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதுதான் சிறந்தது என இங்கு சாட்சியமளிக்க வந்திருந்த பஸ் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள் ஒரேமுகமாகத் தெரிவித்தனர்.

இ. போ. ச. ஊழியர்களுக்கு இ. போ. ச. வில்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதேச கிராம சபைகளுக்குமான்யம்

### அமைச்சு ரூ. 3,51,000 ஒதுக்கியிருக்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராமசபைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சு மான்யமாக 351,000 ரூபாவை வழங்கியுள்ளது. இப்பணம் கிராம சபைப்பகுதிகளில் வீதிகள், பாலங்கள் அமைக்கவும் கிராமசபை மண்டபங்கள் திறுவவுமே உபயோகிக்கப்படும்.

இதுதவிர உள்ளூராட்சி அமைச்சு மன்னார் மாவட்டத்துக்கு 135,000 ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 160,000 ரூபாவும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 140,000 ரூபாவும், திருகோணமலை மாவட்டத்துக்கு 187,000 ரூபாவும், சிலாபம் மாவட்டத்துக்கு 185,000 ரூபாவும் வழங்கியுள்ளது.

மாவட்ட ரீதியில் கொழும்பு மாவட்டத்துக்கே மிகக்கூடுதலான தொகையான 475,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களிலும் கிராமசபைகளின் சீர்திருத்தங்களுக்காக உள்ளூராட்சி அமைச்சு 4,983,200 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. [கா. நி.]

## டில்லியில் கோஸிஜின்

புதுடில்லி ஏப். 21

இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவுகள் மேலும் பலப்படுவதற்கு எல்லாவித வசதிகளும் இருக்கின்றனவென்று ரஷ்யப் பிரதமர் திரு. கொஜிஸின் இன்று கூறினார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த அவர் இன்றுகாலையில் இந்தியாவுக்கு 3மணி நேர விஜயம் மேற்கொண்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## பெண்களை பஸ் சாரதிகளாக நியமிக்க வேண்டுமாம்

### விபத்துக்களை தவிர்க்க ஒருவர் கூறும் யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துசபை பஸ்களை விபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு சாரதிகளாக பெண்களை நியமிக்கவேண்டும்! பஸ்கொண்டக்டர்களும் பிரயாணிகளும் மோதுவதைத் தவிர்ப்பதற்கு பெண்களைக் கொண்டக்டர்களாக நியமிக்கவேண்டுமென்று இ. போ. ச. விபத்துக் கமிஷன் முன் சாட்சியமளித்த திரு. ச. ஆ. கோபாலமூர்த்தி என்பவர் கூறினார். இவர் இலங்கை பிரயாணிகள் சபைத் தலைவர்.

அவர் தொடர்ந்து யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளதுபோல ஒலிபெருக்கிகள் பொருத்தவேண்டுமெனவும், யாழ்ப்பாணத்திலும் ரூட் இலக்கப் பிரகாரம் பஸ் நிறுத்துமிடங்கள் அமைக்கவேண்டுமெனவும் யாழ்ப்பாணத்தில் உல்லாசப்பிரயாணிகள் பஸ் இல்லாததால் சுற்றுலா செல்பவர்களுக்கு சாதாரணமாகச் சேவையிலீடுபடும் பஸ்களே கொடுக்கப்படுவதாகவும் இதனால் பஸ் சேவைகள் மேலும் மோசமடைவதாகவும் கூறினார்.

ஒட்டிசுட்டான் விவசாயப்படை

## சிவலோகநாதன் மரணத்துக்கும் இளம்பெண்ணுக்குத் தொடர்பில்லை

### பொலிஸ் சுப்பிரின்டன்ட் மறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

ஒட்டிசுட்டான் விவசாயப் படையைச்சேர்ந்த சிவலோகநாதனின் மரணம் சம்பந்தமாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலின்படி குறிப்பிட்ட இளம் பெண் ஒருவருக்கும் இம் மரணத்துக்கும் எதுவித தொடர்புமில்லையென பூரணவிசாரணையின் பின்னர் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக் காலை தெரிவித்தார்.

இம்மரணம் சம்பந்தமான பூர்வாங்க விசாரணையை மேற்கொள்ள கொழும்பிலிருந்து இங்குவந்த 8 பேர் அடங்கியஇரகசிய பொலிஸ் கோஷ்டி தொடர்ந்து விசாரணையை நடாத்தி வருகின்றது. ஒட்டிசுட்டான் சென்ற வடபகுதி பொலிஸ் அதிபர் தமக்குக்கிடைத்த தகவலின்படி ஒட்டிசுட்டானில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட பெண்ணை விசாரணை செய்தபின்னரே மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

இப்பெண்ணுக்கும் சிவலோகநாதனின் மரணத்துக்கும் தொடர்பு இல்லையெனவும், இது ஒரு விபத்துமரணமாகவோ, தற்கொலையாகவோதான் இருக்கலாமெனப் பொலிசார் எண்ணுவதாகவும் 'ஈழநாடு' பத்திரிகையில் 19-ம் திகதியே வெளியிடப்பட்டிருந்தது. இதற்குப்பின்னர் இப்பெண்ணுக்கும் சிவலோகநாதனின் மரணத்துக்குமிடையில் தொடர்பு இருப்பதாக வேறு சில தமிழ்ப்பத்திரிகைகள் நேற்றும், நேற்று முன்தினமும் வெளியிட்ட செய்திகளை பொலிஸ் சுப்பிரிண்டன்ட் நேற்று முற்றாக மறுத்ததோடு, அதில எந்த விதமான உண்மையுமில்லையெனவும் தெரிவித்தார்.

இதுபற்றி மேல்விசாரணையை மேற்கொள்ள குருநாகலை சென்ற இரகசியப் பொலிசார் நேற்று ஒட்டிசுட்டான் திரும்பினார்கள். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

## பல்கலைக்கழக ஆலயத்திற்கு மாவிட்டபுரத்திலிருந்து முருகன்பவனி

### இம்மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், திங்கள்

கண்டி பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முருகன் ஆலயத்துக்கான முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்கள் இம்மாதம் 29-ந் திகதி காலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் வந்தடைந்து, நேராக கண்டி வீதி வழியாக சர்வகலாசாலை மாணவர்களும், பஜனைக்கோஷ்டிகளும் தேவாரபாராயணங்கள் இசைக்க, குடைகொடி ஆலவட்டங்களுட

[6-ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அன்பின் அடிப்படை ஆத்மீக உறவே. எல்லா உயிரிலும் ஒரே பொதுவான ஆத்மா இருப்பதை உணர்ந்தவர்கள் எல்லா உயிர்கள் மீதும் அன்புடன் இருப்பர். அந்த அன்புறவே நமக்கு உண்மையான சாந்தியும் இன்பமும் அளிப்பதாகும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் இலக வருஷம் சித்திரை மாதம் 10ம் திகதி [22-4-68]


## 'என்கடன்பணி செய்துகிடப்பதே'

இந்தியாவிலும் இலங்கையின் தென்பகுதியிலும் சென்ற சிலவருடங்களாக நடைபெறும் சிரமதான இயக்கம், 12 நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஆரம்பித்து நடைபெற்றதாகும். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று பாடியதுடன் மட்டுமல்லாமல், ஊர் ஊராகச் சென்று உழவாரப்பணி செய்து வழிகாட்டியுள்ள தமிழ்ப்பெரியார் திருநாவுக்கரசு நாயனாரின் திருநாள் இன்று சைவ உலகம் அனைத்தும் கொண்டாடுகின்றது.

இங்கு மொழி உரிமைக்கான போராட்டம் நடந்த காலத்தில் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அவரது வீர முழக்கம் தமிழ்ப் பகுதியெங்கும் ஒலித்தது. ஆனால் பின்னர் எல்லாம் அடங்கிவிட்டன. அவ்வித வீர முழக்கம் செய்யக் கூடிய திண்மை அவருக்கு எப்படி ஏற்பட்டது? 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்று தம்மையே பொதுமக்களின் பணிக்காக அர்ப்பணித்துவிட்டதால் தான். உடல் உழைப்பின் மூலம் மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகச் செய்தார். அதனால் வேறு யாருக்கும் அடிமைப்படாமல், 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற நிலையை இவரால் அடைய முடிந்தது.

ஈழத்திலே தென்பகுதியில் சிரமதானம் எனும் உடல் உழைப்புப் பணிகள் விசேஷமாக நடைபெற்று, பெரிய பெரிய வேலைகள் நடத்துகின்றனர். அரசாங்கமும் இதற்குப் பூரண ஆதரவளிக்கின்றது. ஆனால் அத்துடன் ஒப்பிடுகையில், வடமாகாணத்திலே சாந்தி சேவா சங்கத்தார் எப்போதாவது நடத்தும் சிரமதான இயக்கத்தைத் தவிர, வேறு எதுவும் நடைபெறுவதில்லை. படித்த வாலிபர்கள், மேஜை ஓட்டிகளாகவும், சம்பளக்கூலிகளாகவுமே வேலை செய்ய வேண்டுமென்று பொதுவாக நினைக்கிறார்களேயன்றி, தங்கள் உடலால் உழைத்து, பொதுமக்களுக்குப் பணி செய்து தொண்டாற்றலமென்று முன்வருவது மிக மிக அருமை.

கிராமப் புறங்களில் ஒருசிறிய வேலையைச்செய்யவும் ஆள் கிடைப்பது மிகக் கஷ்டமாகுமென்று பலர் கூறுகிறார்கள். பலர். படித்துவிட்டு வேலையில்லையென்று சும்மா காலத்தை வீணாக்குகின்றவரின் பட்டாளம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஆனால் உடலுழைப்பின் மூலம் மக்களுக்கு ஏதாவது தொண்டாற்றலாமென்று முன் வருபவர் எவ்வளவுபேர்? நம்மை நாமே சம்பள அடிமைகளாக்கிக்கொள்வதாயின், 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று முழங்கும் வீரம் நமக்கு உண்மையாக எப்படி ஏற்பட முடியும். சில காசுகளுக்கு நம்மை நாமே விற்பதாயின், உடலுழைப்புக்குத் தயாரில்லையாயின், 'இன்பமே எந்நாளும்' நமக்குக் கிடைக்கமுடியுமா?

குடும்பப் பொறுப்புகள் முதலியனவுள்ளவர்கள், இக்காலத்தில் சம்பளத்துக்குத்தான் வேலை செய்ய வேண்டியதாக சமூக நிலை அமைந்திருக்கின்றதென்பது உண்மையே. ஆனால் படித்துவிட்டு வேலையில்லையென்று, காலத்தை வீணாக்கும் வாலிபர்கள், ஊர் பொது நன்மைக்காகத் தங்கள் உடலுழைப்புச்செய்ய சில நாட்களாவது முன்வந்தால், அவர்கள் தங்கள் வாழ்க்கையை பயனுள்ளதாக்கிக்கொண்டு மன மகிழ்ச்சி அடைவதுடன், ஊருக்கும் நன்மை செய்தவர்களாவர். அப்பர் சுவாமிகளின் திருநாளை வெறும் சம்பிரதாயப் பேச்சிலும் பூச்சிலும் கழிப்பவர்களைவிட, உடல் உழைப்பின் மூலம் பொதுப்பணி செய்பவர்களே அதிக பயனும் இன்பமும் அடைவர்.

ஒரு சிறு சிறு காரியங்களுக்கும் கூட, அரசாங்கத்தையும் பிறரையும் எதிர்பார்க்கும்வரை நாம் பிறருக்கு கடமைப்பட்டும் அடிமைப்பட்டுமிருப்போம். நமது தேவைகளை நாமே, கூடுமானவரை செய்துகொள்ளும் திறனும் கட்டுப்பாடும், ஒத்துழைப்பும் நமக்கு ஏற்பட்டுவிட்டால் அன்றே நமக்கு உண்மைச் சுதந்திரம் ஏற்படுவதாக இருக்கும்.

## நன்முயற்சி

பாகிஸ்தானில் மூன்று நாள் தங்கியிருந்துவிட்டு புதுடில்லிக்கு எதிர்பாராதமுறையில் நேற்று வந்து மூன்றுமணி நேரம் இந்தியப் பிரதமருடன் பேசிவிட்டு ரஷ்ய பிரதமர் கொஸிஜின், இவ்விரு நாடுகளின் நட்பையும் நம்பிக்கையையும் பெற்றுத் திரும்பியுள்ளார். பொதுநண்பராகவுள்ள இவர் மூலம், இவ்விரு நாடுகளின் பிரச்னையும் தீர வழிபிறக்க வேண்டும்.

ஜனாதிபதி அயூப்கானின் உடல்நலத்தைப் பற்றி சிலவதந்திகள் கிளம்பின. ஆனால் அவரே விமான நிலையத்துக்கு நேரில்வந்து கொஸிஜினை வரவேற்றுள்ளதிலிருந்து, அவ்வதந்திகள் தவறு என்பதைக் காட்டுகின்றன. ஏற்கனவே அயூப்கானும் இந்திய பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியும், ரஷயாவின் அழைப்பை ஏற்று டாஷ்கண்ட் சென்று தங்களுக்கிடையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாகச்செய்து கொண்டனர். அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் விரும்பத்தக்க நல்லுறவு துரதிருஷ்டமாக ஏற்படவில்லை.

காஷ்மீர்தான் இதற்கு முட்டுக்கட்டையாகஇருப்பதாக பாகிஸ்தான் கூறுகிறது. ரஷ்யப் பிரதமர், ராவல்பிண்டிக்குச் சென்றிருக்கையில், இவ்விஷயமாக அயூப்கான் அவரிடம் தம் கருத்தை விளக்கமாகக்கூறியிருப்பார் அதைப் பற்றியும், இருநாடுகளின் நல்லுறவைப் பலப்படுத்தவும், தமது யோசனைகளை புதுடில்லிக்குவந்த கொஸிஜின் கூறியிருக்கக்கூடும். இருநாடுகளும் யுத்த முஸ்தீபுக்காகச் செலவிடும் பணத்தை, ஆக்கவழியில் பயன்படுத்த வேண்டுமென்று கொஸிஜின் கூறியிருப்பதை இருதரப்பினரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் ஏற்கனவே ஒரே நாடாக ஒரே மக்களாக இருந்தவர்களை, இரண்டாகப் பிரித்து இருசாரினரும் நட்புறவு கொள்ள முடியாதபடி, சில வெளியார் தூபம் போட்டுவருகையில், இச்சிக்கல் தீருவது சுலபமா? காஷ்மீர் பிரச்னை தீர்ந்தாலும், புதிய பிரச்னைகள் கிளம்பாவா? நல்லவேளை இருநாடுகளுக்கும் பொது நண்பராக இருக்கும் ரஷ்ய பிரதமரின் இந்த நன்முயற்சி ஓரளவு நம்பிக்கை அளிப்பதாகும்.

# 'துறவுக்கு எல்லையாகப் பொலிந்த ஈழத்து முனிவர்'

## இன்று இலக்கண சுவாமிகள் பரிபூரணமடைந்த திருநாள்

(ஸ்ரீ தத்புருஷ தேசிகர்)

அப்பர் சுவாமிகள் 81 ஆண்டுகள் வாழ்ந்து சமய ஆசாரியராக அருள்மொழிகளை அருளித்தந்து மக்களுக்கு நல்கி அருளியதை நினைவூட்டுவதாக இலக்கண சுவாமியாரும் இதே நாளில் பரிபூரண மடைந்துள்ளார்கள்.

சுவாமிகள் துறவுக்கு ஓர் எல்லையாக விளங்கியவர். சூரியனார் கோவில் ஆதீனத்தில் ஞானகுரவராக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக பரமாசாரியரிடம் ஞானநூற் கல்வி, சைவ சந்நியாசம் சமயம், விசேஷ நிர்வாணம் ஆகிய தீட்சைகள் பெற்று அந்தத் திருமடத்தின் பரிபாலன சிறப்புக்குக் காரணமாக இருந்தவர்கள்

வடமொழியில் பெரிதும் ஞானமுடையவர்கள். சைவ ஞான நூல்களை வடமொழியிலிருந்து பெயர்த்தெழுத சூரியனார் கோவில் ஆதீனத்தார் செப்பமாக வெளியிடுவதற்கு சுவாமிகளே காரணமாக இருந்தார்கள்.

சிவஞான பாடியம், சிவாக்ரபாஷ்ய, சைவ சந்நியாச பத்ததி, இன்னும் இவை போன்ற பல நூல்களை வடமொழியில் இவர்கள் மேற்பார்வையில் அச்சாகி வெளிவந்துள்ளன. தருமபுரம் ஆதீன முனிவர்களில் ஒருவராக இருந்த வெள்ளி அம்பலவாண தம்பிரான் (குமரகுருபரசுவாமிகளின் மாணவர்) சிவஞான சித்தியாருக்கு சிவாகமங்களிலும் அஷ்டபிரகரணம் முதலிய வழி நூல்களிலும் உபநிடதங்களிலும் மேற்கோள்கள் காட்டி எழுதிய ஞானவர்ண பாடியம் என்னும் பெருநூலை ஆராய்ந்து செப்பனிட்டு வெளியிட நமது சுவாமிகளைத் தவிர தமிழ் நாட்டில் வேறு ஒருவரும் இல்லை என்பதை உணர்ந்து, தருமை ஆதீன மகா சந்நிதான சுவாமிகள் இவர்களைக் கொண்டு பார்வையிட்டு செப்பனிடச் செய்து, இரு புத்தகங்களாக சில பகுதிகளை வெளியிடச் செய்திருக்கிறார்கள்.



சுவாமிகளின் திறமை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. நித்திய கர்மானுஷ்டானங்களை முறையாக கடைப்பிடித்து வாழ்ந்தவர்களில் இவர்கள் தலையானவர்கள். சிவ பூசையில் அனுபவத்தோடு ஒன்றுபட்டவர்கள். சித்தாந்த நுட்பங்களை கேட்பவர்களுக்கு தெளிவுண்டாகும்படி சொல்வதில் இவர்களை அணைவோர் அந்த நாளிலே வேறுயாரும் இல்லையென்று கூடச் சொல்லாம். யாரிடத்தும் எளிமையாக பழகுகின்ற இயல்பும் இவர்களிடமிருந்தது.

துறவுக்குவேண்டிய கட்டுப்பாடுகள் அனைத்தையும் வாழ் நாள் முழுதும் கடைப்பிடித்தவர்கள்.

தம்மிடம் வருபவரிடம் அவரவர்கள் தகுதிக்குகந்த உரிய தீட்சைகளைப் பெற்று சைவ ஒழுக்கம் கடைப்பிடிக்க வேண்டுவது இன்றியமையாததென்று வற்புறுத்துவார்கள்.

சுவாமிகளின் உண்மைத் துறவுக்கு அடையாளம், என்போன்ற பல ஆண்டுகள் பழகியவருக்கும் அவரது ஜன்மஸ்தானம் தெரியாதிருந்தது.

சுவாமிகளுக்கும் எனக்கும் 20 ஆண்டுகள் நெருங்கிய தொடர்பு இருந்தது. நான் நிர்வாண தீட்சை பெறுவதற்கு அவர்கள் தான் காரணமாக இருந்தார்கள். விசேட தீட்சை பெற்று திருமுறைப்பாராயண அவையில் இருந்ததுடன் சில ஆண்டுகள் கழிந்த பிறகு சிவ பூசை எழுந்தருளச் செய்து கொள்ள விரும்பியதை சுவாமிகளிடம் தெரிவித்தேன், தகுதியுள்ள நீ நிர்வாண தீட்சை பெற்றே எழுந்தருளச் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அடிக்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

ஸ்ரீ இலக்கண சுவாமியாரைத் தெரியுமா? என்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்த ஸ்ரீ தத்புருஷ தேசிகரைக் கேட்டேன். "அவரைத் தெரியாமலா? அவர்தானே எனக்குப் பல வகைகளிலும் வழிகாட்டிய பெரியார்" என்று மிகவும் புகழ்ந்து பேசினார். ஸ்ரீ சுவாமியாரைப்பற்றி இதுவரை இங்கு பலரும் அறியாத பல விஷயங்களைச் சொன்னார். அவர் எழுதிய விசேஷ கட்டுரையும் அவரது திருநாளான இன்று வெளியாகிறது.

அங்கு பல வருடங்களாக அவருடன் பழகியும், அவரது ஜன்மஸ்தானம் யாழ்ப்பாணம் என்பது தமக்குத் தெரியாதாம். சுவாமிகள் பேசும் தமிழ், தமிழகத்தாரின் பேச்சுத் தமிழாகவே இருந்ததாயும் ஒரு வேறுபாடும் காண முடியாதென்றும் வடமொழியிலே பெரும் புலமை பெற்றிருந்ததாயும் தெரிவித்தார்.

சூரியனார்கோயில் ஆதீனத்திலே பல்லாண்டுகள் இருந்து, முன் ஆதீனகர்த்தருக்கு வலக்கரம் போல் சுவாமிகள் இருந்தார்கள். சுவாமிகளுக்குப் பிறகு அந்த ஆதீன பட்டத்துக்கு வருமாறு, ஆசார்ய அபிஷேகம் செய்து கொள்ளுமாறு கேட்டும் அவர் மறுத்து தமக்கு எவ்வித பதவியும் தேவையில்லை என்று கூறிவிட்டாரர்களாம். பின்னர் ஏதோ மனதுக்குப் பிடிக்காததால், அந்த ஆதீனத்திலிருந்து வெளியேறி, கடைசி வரை அங்கு காலடியும் வைக்கவில்லை என்றும், துறவின் எல்லையைக் கண்ட உத்தமர் இவர் என்றும் தேசிகர் அவர்கள் கூறியதைக் கேட்டேன். ஈழத்துக்கு எவ்வளவு பெருமை!

16 வயதில் யாழ்ப்பாணத்தைவிட்டு தமிழகம் சென்றவர். கடைசிவரை இந்தப் பக்கம் எவ்வளவோ அழைத்தும் வராதிருந்துவிட்டார். சிதம்பரத்திலே மடம் அமைத்து சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பெரும் தொண்டாற்றி அந்தப் புனித மண்ணிலேயே அடக்கமானார். அவரது பெருமை இனிப் போகப் போகத்தான் உலகுக்கு நன்கு தெரியப் போகிறது.

அப்பெரியார் எந்த இடத்தில் ஜனித்து, இளமையில் நடமாடினாரோ, அந்தக் குடும்பத்தார் அந்த இடத்தில் "ஈழநாடு" பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வருவது பலருக்குத் தெரியாது.

'ஈழநாடு' வெறும் கட்டாந்தரையிலிருந்து எழவில்லை. இதற்கு ஆழமான அஸ்திவாரம் ஸ்ரீ இலக்கண சுவாமிகள் என்ற ஸ்ரீ முத்துக்குமார தம்பிரான் சுவாமி அவர்கள் தவசக்திதான் என்று நினைத்துப் பெருமையடைகின்றோம். இவ்வளவு பலமான அஸ்திவாரத்துடன் கூடிய 'ஈழநாடு'க்கு மேலான எதிர்காலம் அவரது அருளால் காத்துள்ளதென்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது.

ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் உயிர்ப்பாலமிட்டு, இருதேச மக்களின் நல்வாழ்வுக்கும் மேலான முறையில் உதவியுள்ள இப்பெரியார் காட்டியுள்ள நெறி சுலபமானதன்று. அதைப் பின்பற்றி நடக்க அவரது அருள்தான் துணைநிற்க வேண்டும். 'ஈழநாடு' காரியாலய ஊழியர்களும் அவர் அவதரித்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பல அன்பர்களும் இன்று அவரது

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட வியட்னாமியர்

# அமெரிக்க, தென் வியட்னாம் துருப்புகள் 9,000 பேரைக் கொன்றதாக அறிவிப்பு

ஹனோய், ஏப்ரல் 21

கடந்த மாதம், தென் வியட்னாமின் வட பகுதியிலுள்ள இரண்டு மாகாணங்களில் நடத்திய போர் நடவடிக்கைகளில் ஏறத்தாழ 9,000 அமெரிக்க, தென் வியட்னாமிய துருப்புகளைத் தாம் கொன்றுள்ளதாக வட வியட்னாமியர் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்த இந்த 9,000 பேரில், 5,000 க்குமதிகமானோர் அமெரிக்கர்கள் என்று வியட்கொங் தேசியவிடுதலை முன்னணிச் செய்தித்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடத்திய இப்போர் நடவடிக்கைகளில், நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும், டாங்கிகள் உட்பட 250 இராணுவ வாகனங்களை நாசமாக்கியதாகவும் அச் செய்தித்தாபனம் மேலும் அறிவித்துள்ளது.

ஹொங்கொங்கிலிருந்து கிடைத்துள்ள செய்தியொன்று, தென் வியட்னாமில் 'ஹவே-12' என்னும் இடத்துக்கருகே 34 அமெரிக்க ஹெலிகொப்டர்களை வியட்கொங்கியர் சுட்டு வீழ்த்தியுள்ளனர் எனக் கூறுகிறது.

## 'ஓநாய்ச் சிறுவன்'ராமு இறந்து விட்டான்

லக்னோ, ஏப்ரல் 21

இந்தியாவின் பிரபல 'ஓநாய்ச் சிறுவன்' ராமு, நேற்று லக்னோ ஆஸ்பத்திரியில் மரணமானான். கடந்த 14 வருடங்களாக அவன் இவ்வாஸ்பத்திரியிலேயே இருந்து வந்தான். காட்டு விலங்குகளால் வளர்க்கப்பட்டவனான இச்சிறுவன், 1954-ல் கண்டுபிடிக்கப்பட்டு, லக்னோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அச்சிறுவன், ஓநாய்போல் ஊளையிட்டும், பச்சை மாமிச உணவை அருந்திக்கொண்டுமே இருந்தான். மனிதர்களைக் காணவும் அவன் விரும்பவில்லை. ஆஸ்பத்திரியில் இருந்த இந்தப் பதினான்கு வருடங்களிலும், அவனுடைய பழக்க வழக்கங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஆஸ்பத்திரியில் ராமு இருந்த காலத்தில், உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல பிரபல மருத்துவ நிபுணர்கள் வந்து அவனைச் சோதித்துப் பார்த்தனர். ஆனாலும் அவர்களில் ஒருவராலும் ராமுவின் மர்மத்தைத் துலக்க முடியவில்லை.

ஓநாய்ச் சிறுவனாக இவ்வுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ராமு, ஓநாய்ச் சிறுவனாகவே இறந்துள்ளான்.

அமெரிக்காவில்

# வியட்னாம் போர் எதிர்ப்பு இயக்கத்தின் உச்சக்கட்டம்

## இவ்வாரம் நடக்கவிருக்கும் ஆர்ப்பாட்டங்கள்

வாஷிங்டன், ஏப்ரல் 21

அமெரிக்காவிலுள்ள வியட்னாம் போர் எதிர்ப்பு இயக்கத்தினர், இவ்வாரம், இதுவரை நடந்துள்ள போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களை விடப்பெரிய அளவில், பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

எதிர் வரும் வெள்ளிக்கிழமையன்று, உயர்நிலைப் பள்ளி மாணவர்களை ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பதென வியட்னாம் போர் எதிர்ப்பு இயக்கத்தினர் உத்தேசித்துள்ளனர்.

அடுத்த நாளாகிய சனிக்கிழமையன்று, ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் யாவும் ஓர் உச்சகட்டத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அன்று இந்தப் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் 17 நகரங்களில் நடைபெறுமெனக் கூறப்படுகிறது. நியூயோர்க், வாஷிங்டன், சிக்காகோ ஆகிய நகரங்களும் இவற்றுள் அடங்கும்.

மங்களூர்

## கலவரங்களில் இருவர் மரணம்

மங்களூர், ஏப். 21

மைசூர் ராஜ்யத்தில், மங்களூரில் நேற்று நடைபெற்ற வன்முறைக் கலவரங்களில் இருவர் உயிரிழந்தனர்.

இவர்கள் இருவரில் ஒருவர் கோஷ்டிச் சண்டையில் மாண்டார். மற்றவர் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தார்.

மற்றும் 11 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இருநூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

மங்களூரில் 12 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்று நகரில் அமைதி நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின் புதிய பிரதமர் பதவி ஏற்றார்

ஒட்டாவா, ஏப்ரல் 21

கனடாவின் ஆளுங் கட்சியான லிபரெல் கட்சியின் புதிய தலைவரான திரு. எலியற் ட்ரூடோ, கனடாவின் புதிய பிரதமராக நேற்றுப் பதவிப்பிரமாணம் ஏற்றுக்கொண்டார். திரு. லெஸ்டர் பியேர்ஸனின் பதவி ஓய்வு அறிவிப்பைத் தொடர்ந்து திரு. ட்ரூடோ லிபரெல் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

ஓர் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராகவே தாம் பதவியேற்றுள்ளதாகக் கருதுவதாகப் பிரதமர் திரு. ட்ரூடோ நேற்று இங்கு அபிப்பிராயம் வெளியிட்டார்.

ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்தத் தாம் உத்தேசித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

திரு. ட்ரூடோ, பழைய மந்திரிசபையில் சில முக்கிய மாற்றங்கள் செய்துள்ளார். வெளியுறவு மந்திரியாக திரு. மைக்கேல் ஷார்ப், திரு. போல் மார்டினின் இடத்தை நிரப்புகின்றார்.

## அரபு நாட்டு மன்னர் மூவர் ரியாடில் கூடினர்

ரியாட், ஏப்ரல் 21

அரபுநாட்டு மன்னர்கள் மூவர், சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாடில், அரபு உச்சி மகாநாடு ஒன்றைக் கூட்டுவதுபற்றி ஆலோசித்து வருகின்றனர். ஜோர்தான் மன்னர் ஹுசெயின் மொரொக்கோ மன்னர் ஹஸான், சவுதி அரேபிய மன்னர் பெய்ஸால் ஆகியவரே இம்மூன்று மன்னர்களுமாவர்.

இஸ்ரேலுக்கெதிராக ஒன்றுபட்ட நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் உயர் தலைவர்களைக் கொண்ட ஓர் அரபு உச்சி மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்ற கருத்தை ஜோர்தான் மன்னர் ஹுசெயினும், மொரொக்கோ மன்னர் ஹஸானும் ஆதரிப்பதாகவும் ஆனால் சவுதி அரேபிய மன்னர் பெய்ஸால் இக்கருத்தை அவ்வளவுதூரம் வரவேற்கவில்லையெனவும் கூறப்படுகிறது.

## பிரிட்டிஷ் குண்டு விமானம் விழுந்தது

### சிப்பந்திகள் மாண்டனர்

லண்டன், ஏப்ரல் 21

நேற்று ஸ்கொட்லாந்தின் மேற்குக் கரையில் பிரிட்டிஷ் குண்டு விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதன் விளைவாக, விமானத்திலிருந்த சிப்பந்திகளனைவரும் இறந்துவிட்டதாக நம்பப்படுகிறது. இதுவரை, நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

# தென் மேற்கு ஆபிரிக்காவில் கோர விமான விபத்து

## 122 பேர் உயிரிழந்தனர்

வின்டொக், ஏப். 21

தென்மேற்கு ஆபிரிக்காவின் தலைநகரான வின்டொக்கிலிருந்து லண்டன் நோக்கிப் புறப்பட்ட போயிங் விமானமொன்று சிறிது தூரம் சென்றதும் விழுந்து நொறுங்கியதன் விளைவாக அதிலிருந்த 129 பேரில் 122 இறந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முதலில் கிடைத்துள்ள செய்திகளின்படி 7 பேர் மட்டும் உயிர் தப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த போயிங் விமானம் தென்னாபிரிக்க ஏர்வேஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும். இன்று பிற்பகல் விமானம் லண்டன் வந்தடைய இருந்தது.

விமானச் சரித்திரத்திலேயே மிக மோசமானதான விமான விபத்துக்களில் இதுவும் ஒன்றெனக் கருதப்படுகிறது.

தனி விமான விபத்துக்களில் மிக அதிகமான உயிர்களைப் பலி கொண்ட விமான விபத்து 1966-ம் ஆண்டு பெப்ரவரி 4-ந் திகதி ஜப்பானில் நடைபெற்றது. விமானத்தில் பிரயாணஞ் செய்த 133 பேரும் அவ்விபத்தில் உயிரிழந்தனர்.

## பாக்., ஜப்பானிலிருந்து சிமெந்து?

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் ஏற்பட்டுள்ள சிமெந்துத் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து சிமெந்து இறக்குமதிசெய்ய அரசாங்கம் முயற்சிமேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

ரஷ்யா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட சிமெந்து இங்கு வராததும் இங்கு நிலவும் சிமெந்துத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

# 'வெளிநாட்டுதவியையே நம்பியிருக்க வேண்டாம்'

## இந்திய மக்களிடம் பிரதமர் இந்திரா வேண்டுகோள்

கோராக்பூர், ஏப்ரல் 21

வெளிநாட்டு உதவியையே இந்திய மக்கள் எப்போதும் எதிர்பார்த்திருக்கக் கூடாதென்றும், தமது சொந்த முயற்சியால் முன்னேற முயலவேண்டுமென்றும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று, வட இந்தியாவில் கோராக்பூர் என்னுமிடத்தில், ஜப்பானிய உதவியுடன் நிறுவப்பட்டுள்ள அரசாங்க உரத் தொழிற்சாலையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே திருமதி இந்திரா காந்தி இவ்வாறு தெரிவித்தார். இவ்வுரத் தொழிற்சாலை 3 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

வடமராட்சி

## க்ஷயரோகிகளுக்கு இலவச உடை

புலோலி, ஞாயிறு

வடமராட்சி க்ஷயரோகத் தடுப்புச் சங்கத்தினர் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உடுப்புகளை மந்திகை, கரவெட்டி, அம்பன் ஆஸ்பத்திரிகள் மற்றும் இந்திராணி வைத்தியசாலை ஆகியவற்றில் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்குப் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா தலைமையில் அண்மையில் இலவசமாக வழங்கினர்.

## அல்பேனியாவில் சிகிச்சை

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வடபகுதி செயலாளரான திரு. வீ.ஏ. கந்தசாமி அல்பேனியாவிலுள்ள வைத்திய நிலையமொன்றில் சிகிச்சைபெற்று வருவதாகவும், அண்மையில் நிகழவிருக்கும் மே தின விழாக்களில் அவர் கலந்துகொள்ளமாட்டாரென்றும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி இறக்குமதி மேலும் குறையும்

யாழ்ப்பாணம், திங்கள்

இவ் வருடத்தில் இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசியின் அளவை அரசாங்கம் மேலும் குறைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வருடத்தில் 1கோடி 47லட்சம் புசல் நெல் இங்கு உற்பத்தி செய்யப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்தி செய்யப்படவிருக்கும் 2410,000 தொன் அரிசியின் அளவைக் கொண்டே வருடாந்த இறக்குமதி குறைக்கப்படலாமெனத் தெரிகின்றது.

இப்பெரும் போக காலத்தில் வழங்கப்பட்ட 7 1/2க் கோடி ரூபா விவசாயக்கடனையும் வசூலித்த பின்னர் நெல் உற்பத்தியை இன்னும் அதிகரிக்க மேலும் கூடுதலாக அரசாங்கம் கடன் வழங்கவும் எண்ணியுள்ளது.

இவை பற்றிய அண்மையில் நடைபெற்ற விவசாய மகாநாடொன்றில் ஆராயப்பட்டது. விவசாயக் கடன்களை வழங்குதல். அவற்றை வசூல் செய்தல், நெல்வழங்குதல், பசளைகளுக்கு உதவிப் பணம் கொடுத்தல், உணவுப் பொருட்களை விநியோகித்தல் ஆகியன உட்படப் பல்வேறு விஷயங்களும் இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. [ஈ. நி]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 22-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-30குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு, 10-15 நேயர் விருப்பம்.

# "அரசியல் தலையீடிருந்தால் இலக்கியம் வளராது"

## அரசாங்க அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"ஒரு நாட்டின் அரசியலில் விழிப்புணர்ச்சி ஏற்படும்போதுதான் அங்கு கலையோ, இலக்கியமோ வளரமுடியும். அரசியற் பிரச்னைகள் தலைதூக்கி நாடு அல்லற்பட்டு நிற்கும்போது இலக்கிய வளர்ச்சி அங்கு நடைபெறுது. இதனாலேயே 1961ம் ஆண்டிலிருந்து 1963ம் ஆண்டுவரை யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம் செயற்படாதிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது."

இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றத்தின் இலக்கியக் குழுவின் முதலாவது நிகழ்ச்சியான பா அரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தெரிவித்தசர்.

அரசாங்கச் செயலக விளையாட்டு மண்டபத்தில் கு. து உருத்திரமூர்த்தி (மஹாகவி) தலைமையில் நடைபெற்ற பா அரங்கில் திரு. வேணன் அபயசேகரா தொடர்ந்து பேசுகையில், ஒரு நாட்டின் கலாச்சாரத்தை அந்நாட்டின் கலை, இலக்கியப் போக்குகளே பேணிப்பாதுகாப்பதாகவும், அதற்கு எந்த அரசியற் தலையீடும் இருக்கக்கூடாதென்றும், ரோம் நகரிலும், கிரீஸ் நகரிலும் அரசியற் புரட்சி ஏற்பட்ட வேளையில் அங்கு இலக்கிய வளர்ச்சி தடைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதென்றும் தெரிவித்தார்.

திரு. மஹாகவி தமது தலைமையுரையில் தமிழ்க் கவிதை என்பது சங்க காலத்திலும், சோழர் காலத்திலும் மட்டும் வளர்க்கப்பட்டதென்ற பொதுவான அபிப்பிராயம் தவறானதென்றும், எமது காலத்திலும் கவிதை இலக்கியம் வளர்க்கப்பட்டு வருகின்றதென்றும், இக்காலத்திலேயே ஈழத்தில் தரமான கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

கவிஞர்கள் வி. கந்தவனம், இ. நாகராஜன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, வே. குமாரசாமி, மஹாகவி உட்படச் சுமார் 10 கவிஞர்கள் தமது புதிய கவிதைகளை இங்கு அரங்கேற்றினார்கள்.

மஹாகவியால் எழுதப்பட்ட 'கோலம்' என்ற கவிதை நாடகமும் இங்கு மேடையேற்றப்பட்டது. (ஈ. நி.)

## தொடர்ந்து றிமாண்ட்

குரும்பசிட்டி, ஞாயிறு

"சம்பவம் நடந்த தினம் இரவு வீட்டில் இருக்கையில் பொன்னம்பலம் தோட்டப் பக்கமாக 'ஐயோ, "ஐயோ எனப் பலர் குளறும் சப்தம் கேட்டது. வீட்டைவிட்டு வெளியேறி சப்தம் கேட்ட திசையை நோக்கி துரையப்பா கிணற்றடியால் போனேன், போகும்போது எனக்கெதிராக காலஞ்சென்ற சின்னையா ஒரு கையில் ஆயுதம் தாங்கியும், மற்றக்கையில் 'ரோச் லைற்' றும் கொண்டுவந்திருந்தார். இவரின் நிலைமையைக்கண்டு பயந்து நான் வீட்டுக்குத் திரும்பிப்போனேன். சின்னையா பின்னர் எங்கே போனார் என்பது எனக்குத் தெரியாது. மறுநாள் காலை செல்லத்துரை முதல் இரவு சத்தம் கேட்ட திசையில் இரத்தக்காயங்களுடன் இறந்து கிடந்தார்."

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் கட்டுவன் கொலை வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது வேலுப்பிள்ளை வல்லிபுரம் (ஆசிரியர்) சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது சாட்சி தாம் சின்னையாவைக்கண்டபோது உடம்பில் இரத்தக்கறை, காயங்கள் எதுவும் காணப்படவில்லையெனக் கூறினார்.

வழக்குமேல்விசாரணையை ஒத்திவைத்த நீதிபதி எதிரியைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் திரு. சிவ. ஸ்ரீதரனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 27-ந் திகதி கட்டுவன்வாசியான முருகேசு செல்லத்துரை என்பவரைக் கொலைசெய்ததாக வல்லிபுரம் தம்பிராசாமேல் காங்கேசன்துறைப் பொலிஸாரால் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# ரூ. 15 லட்சம் செலவில் மன்னார்குளம் திருத்தப்படும்

அடம்பன், ஞாயிறு

மன்னாரப் பகுதிக்குப் பஞ்சத்தைப் போக்கி சிறப்பை அளித்துக் கொண்டுள்ளதும் இராட்சதகுளம் என வர்ணிக்கப்படுவதுமாகிய கட்டுக்கரைக் குளத்தின் திருத்த வேலைகளுக்குப் பதினைந்து லட்ச ரூபாவும், வாய்க்கால் திருத்த வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலையைக் "கொம்மேஷல் கம்பனி" பொறுப்பேற்று வேலை செய்யவுள்ளது. இதனால் இம்முறை சிறுபோக வேளாண்மையை நிறுத்தி வைப்பதாக இம்மாதம் 17-ம் திகதி நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குளத்தில் 4 அடிக்குச் சேறு இருப்பதாகவும், திருத்த வேலையின் போது குளக்கட்டை இன்னமும் 3 அடி உயர்த்த இருப்பதாகவும் இதனால் தண்ணீர் பாய்ச்சல் 11 1/2 அடியாகுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனையை குள அதிகாரிதிரு. ஞா. ம. ஆரோகணம்பிள்ளை பல முறை மேலதிகாரிகளுக்குச் சமர்ப்பித்துள்ளார். இதில் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர்திரு வீ. ஏ. அழகக்கோன் அரசாங்க அதிபர் திரு. ஜே. நேசையா ஆகியோர் பெரு முயற்சி எடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலமா வழங்கப்பட்டது

அளவெட்டி ஞாயிறு

சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமமக்களுக்குப் பாலமா வழங்கப் பட்டது

கெயர் ஸ்தாபனத்தார் இலவசமாக அரசாங்க அதிபரிடம் வழங்கிய இப்பால்மாவை வடபகுதியில் கிராமசேவைகாளர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினார்கள்.

## அரசாங்க நிர்வாகம் பற்றி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க அலுவலக மேற்பார்வையாளர்களும், 'பீல்ட்' வெளி உத்தியோகஸ்தர்களும் எவ்வாறு நிர்வாகமும், மேற்பார்வையும் நடாத்தவேண்டும் என்பது பற்றிய கருத்தரங்கொன்று நேற்றும் முன் தினமும் யாழ்ப்பாணம் செயலகத்தில் நடைபெற்றது. அரசாங்க திட்ட அமைச்சினால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பயிற்சி வகுப்பு டைரக்டர் திரு. ஏ. எஸ். வனசிங்கா இதற்குத் தலைமை தாங்கினார். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் இக்கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார்.

அரசாங்க அலுவலகத்தின் பல துறைகளுக்குமான பயிற்சிகள் பற்றிய ஆலோசனைகளும் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது பொதுவேலை நிர்வாக விசேட பயிற்சியாளரான டாக்டர் பாயி, 'பீல்ட்' உத்தியோக பயிற்சி வகுப்பு பிரதம அதிகாரியான திரு. நடராஜா ஆகியோரும் பேசினார்கள். சுமார் 200க்கும் மேற்பட்ட உத்தியோகஸ்தர்கள் இங்கு வந்திருந்தனர்.

அரசாங்க உயர்தர அதிகாரிகளுக்கான கருத்தரங்கொன்றும் இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் இங்கு நடைபெற்றது. (ஈ. நி.)

## சகோதரி நிவேதித்தாவின் நூற்றாண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

சகோதரி நிவேதிதாவின் நூற்றாண்டு விழாவில் பங்கு கொள்ளுவதற்காகஇலங்கை வந்துள்ள கல்கத்தா சாந்தா மடம் ராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த சந்நியாசினிகளான பிரவ்ராஜிகா முக்தி பிராண பிரவ்ராஜிகா ஆத்மப்பிராண ஆகிய இருவரும் 25-ம் திகதி மாலை 5 மணிக்கு காரைநகர் இந்துக்கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திலும் 26-ம் திகதி காலை 9மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திலும்கலந்துகொள்வார்கள்.

## பாடசாலையில் சேரும் வயது

கொழும்பு, சனி

அடுத்த வருடத்திலிருந்து கட்டாயமாகப் பாடசாலைக்குச் சேரும் வயது 6 வயதாக்கப்பட்டுள்ளது.

இப்போது 4 வருடம் 9 மாதம் பூர்த்தியான ஒரு பிள்ளை பாடசாலையில் சேர்ந்துகொள்ளலாம். வயது விஷயத்தில் ஒரே சீரை அனுசரிக்குமுகமாக [illegible] பாடசாலையில் சேரும் வயது 6 ஆக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

மல்லாவி, ஞாயிறு

துணுக்காய் காரியாதிகாரி பிரிவில் உள்ள 12 கிராம முன்னேற்றச் சங்கங்களும், 2மாதர் சங்கங்களும் சேர்ந்து இயங்கும் துணுக்காய்ப் பிரிவுக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் திரு வ. வேலுப்பிள்ளை, உப தலைவர் திரு. வே. வடிவேற்பிள்ளை, செயலாளர் கு சிவஞானசண்முகம், உபசெயலாளர் திரு. மு. இலட்சுமணபிள்ளை, [illegible] திரு [illegible] ரத்தினம்,

## கண்டியில்

# இறைச்சிக்கடைக்காரர் கொள்ளை லாபம்

## அதிகாரிகள் அசிரத்தை

கண்டி, ஞாயிறு

இங்குள்ள இறைச்சிக் கடைக்காரர்கள் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி இவற்றைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 10 சதம் முதல் 20 சதம் வரை கூடுதலாக விற்றுக்கொள்ளை லாபம் சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களின் அன்றாடத் தேவையான இறைச்சியில் கொள்ளை லாபமடிக்கும் இவர்கள் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்காதது பொது மக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

அண்மையில் இறைச்சிக் கடைக்காரர்களின் சங்கத்திற்கும். கண்டி மேயருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, கண்டி நகரசபை எல்லைக்குள் இறைச்சியில் கொள்ளை லாபமடிக்கும் எவரும் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவரது லைசென்சு ரத்துச்செய்யப்படும் என்ற மேயரின் எச்சரிக்கையின் பின்னும் தொடர்ந்து கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலான விலைக்கே இறைச்சி விற்கப்படுகின்றது.

நகரசபை அதிகாரத்திற்குட்பட்ட, கண்டி மத்திய சந்தையிலும், கட்டுகாஸ் தோட்டை சந்தையிலும் உள்ள இறைச்சி வியாபாரிகளே கூடுதலான விலையில் விற்பனைசெய்துவருகின்றனர். இதுபற்றி நகரசபையோ, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளோ நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

## சைக்கிள் திருடர் கைது

குரும்பசிட்டி, ஞாயிறு

சுன்னாகம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் ரீ. செல்லையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று ஏழாலையைச் சேர்ந்த சின்னத்துரை நவரத்தினம் என்ற வாலிபனிடமிருந்து களவுபோன இரண்டு சைக்கிள்களைக் கைப்பற்றியது. பொலிஸ் நடாத்திய விசாரணைகளையடுத்து மேலும் சில திருட்டுப்போன சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் மேலும் மூன்று வாலிபர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர் நவரத்தினம் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் இம்மாதம் 28-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## தனிச்சிங்களத்தில் இடமாற்றக் கடிதம்

### அனுராதபுர தமிழ் ஆசிரியர்களுக்கு

அனுராதபுரம், ஞாயிறு

வடமத்திய மாகாணத்திலுள்ள பல பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்குடன் இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனுராதபுர விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்திலுள்ள நான்கு ஆசிரியர்களுக்கு 1-5-68 முதல் இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தனிச் சிங்களத்தில் இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மொழி அறியாத காரணத்தால் விடயத்தை அறிவதில் இவ்வாசிரியர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் ஆசிரியர்களுக்கு அனுப்பப்படும் இடமாற்றக் கடிதத்தில் தமிழுக்கு எதுவித அந்தஸ்தும் வழங்கப்படாதது மிக வருத்தத்துக்குரியதென அனுராதபுர தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

தொழிலாளி

பூநகரிப் பகுதி தென்னந் தோட்டத்திற்கு விவசாயத் தொழிலில் அனுபவமும், 25-35 வயதுக்குட்பட்டவரும் தமிழ் G.C.E. படித்தவரும், ஆங்கில அறிவுடனும் ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 112, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

1429

### காணவில்லை

P686000 தொடர்பிலக்க ஏழுகூப்பன்கள் நல்லூர் ஐஇய பண்டகசாலையில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம்வழங்கப்படும் R. திருஞானம், 41, செட்டித்தெரு, நல்லூர்.

1439


**REGAL JAFFNA**
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
Richard Todd & Anne Heywood
in
**THE VERY EDGE**
[Adults]

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00&9-45 p. m.
Pre Poya & Poya 10-30 a m
Orson Welles
in
**DAVID & GOLIATH**
[Techni color&Cinemascope]

**RAJAH**
JAFFNA
Daily at
4-45 7-00 & 9-45 p.m.
Pre Poya &Poya 10-30 a m
Robert Anthony
in
**Cross Fire in Caracas**
[Strictly for Adults]


## 8 பேரும் கோர்ட்டில் சரண்

அளவெட்டி, ஞாயிறு

கீரிமலையில் அண்மையில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் தேடப்பட்டு வந்த ஒரு இளம் பெண் உட்பட எட்டுப் பேரும் மல்லாகம் நீதிமன்றத்தில் தமது வழக்கறிஞர் மூலம் சரணடைந்தனர். ஏக்கனவே ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் மேற்படி 13பேரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 24ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

## வீட்டுக்கு தீ வைத்தாராம்

குரும்பசிட்டி, ஞாயிறு

தீவைத்து வீட்டைச் சேதப்படுத்தியதாக குற்றம் சுமத்தி தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் விசாரணை முடிவில் எதிரியான பொன்னுத்துரை என்பவரை குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்குவதை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் இம்மாதம் 27-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரியின் கைவிரல் அடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டதுடன் அத்திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## இடமாற்ற மகாநாடு

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அடுத்த மாதம் ஆரம்பத்தில் நடக்கவிருக்கும் ஆசிரியர் இடமாற்றம் பற்றிப் புனராலோசனை செய்யும் நோக்கத்துடன்கல்வித்திணைக்களம் இம்மாதம் 25ம் திகதியளவில் சகல பிரதான உத்தியோகத்தரையும் கொண்ட மகாநாடொன்று நடாத்த விருப்பதாகத் தெரிகிறது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை] | விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்


# அரியாலை சுதேசிய விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை 49-வது சுதேசியதிருநாட் கொண்டாட்ட விழாவைமுன்னிட்டு நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளினதும் முடிவுகள் பின்வருமாறு:

ஐந்து மைல் மரதன் ஓட்டம்- எஸ். பரமேஸ்வரன், எஸ். சில்வெஸ்டர், எம். கதிர்காமநாதன்.

25 மைல் சைக்கிளோட்டம்- த. சுப்பிரமணியம், க. சி சுப்பிரமணியம், க. குலசேகரம்பிள்ளை.

220 யார் மத்திய பிரிவு- எஸ். சண்முகலிங்கம், மு. ஜெயந்திரா, ஐ. தேவராசா, மேற் பிரிவு- எஸ். செல்வராசா, எஸ். சோதிராசா, எஸ். வரதராசா.

வளர்ந்தோர்- கே. சண்முகலிங்கம், மு. தெய்வேந்திரா, த. செல்வரத்தினம்.

குண்டு எறிதல்- மு. தெய்வேந்திரா, கு. குமாரத்தியானன், ச. குகவரதராசன்.

மூன்றுகால்ஓட்டம்- பொ. தவநாதன், கு. குமாரத்தியானன், எம். ஜெயரத்தினம், கே. ஏகாம்பரம், என். கிருஸ்ரி, என். அலோசியஸ்.

மெதுவான சைக்கிளோட்டம்- ச. சண்முகலிங்கம், கை. சுந்தரலிங்கம், கோ. சுந்தரலிங்கம்.

நிதான ஓட்டம் பெண்கள்- பொ. சந்திரகுமாரி, க. தேவிகா, க. கௌரி.

தலையணைச்சண்டை- எஸ். கணேசலிங்கம், சி. பத்மநாதன்.

110 யார் அஞ்சல்ஓட்டம்- நாம் நால்வர், பச்சைத் திரை, அருணோதயா.

100 யார் கீழ்ப்பிரிவு- ஏ. கிருபநாதன், சு. சண்முகநாதன், ப. யோகரத்தினம். மத்தியபிரிவு- எஸ். சண்முகலிங்கம், மு. ஜெயந்திரா, ஐ தேவராசா. மேற்பிரிவு- ஆர். துரைரத்தினம், எஸ். செல்வராசா, எஸ். வரதராசா.

வளர்ந்தோர். மு. தெய்வேந்திரா, கே. சண்முகலிங்கம், த. செல்வரத்தினம்.

ஒரு மைல் ஓட்டம்- எஸ். அலோசியஸ், எம், கதிர்காமநாதன், எஸ். மகேந்திரன்.

75 யார் பெண்கள்- த. சித்திரா. சோ. காமினி, சு. கமலாதேவி.

சங்கீதக்கதிரைபெண்கள்- சோ. பத்மினி, பொ. சந்திரகுமாரி, க. தேவிகா.

முதியோர்ஓட்டம்- ச. சிவகுரு, சி. குலத்துங்கம், இ. முத்தையா.

440 யார் அஞ்சலோட்டம்- கிறீன்பீல்ட், நாம் நால்வர், வெளியூர்.

தடையோட்டம்- க. சண்முகலிங்கம், இ. சிறிதரன். ஜீ ஸ்ரீகாந்தன்.

மத்தியஸ்தர் ஓட்டம்- க. முத்தையா, சரோஜினி சதாசிவம், தா. சோமசேகரம், திருமதி சோமசேகரம். கயிறிழுத்தல்- இளந்தாரிகள்.

விநோத உடைப்போட்டி (குழு)-சிங்களச் சோடி, சிவமயம் எக்ஸ்பிரஸ், (தனி)- பஞ்சாபிப்பெண். காப்பிலிப் பெண்.

உதைபந்தாட்டம் 'ஏ' பிரிவு- கிறஸ் கொப்பேர்ஸ் (மானிப்பாய்), 'பி' பிரிவு- சிங்கிங் பிஸ் (குருநகர்)

கலைப்போட்டிகள்

பேச்சுப் போட்டி மேற்பிரிவு- செ. கனகாம்பிகை, ப. யோகநாதன், மத்திய பிரிவு ஆண்- த. தர்மராசா, மு. குகதாசன் மத்தியபிரிவு பெண்- ம. கிருஷ்ணவேணி க. ரஞ்சினி, கீழ்ப்பிரிவுஆண் வி. விஜயேந்திரா, கீழ்ப் பிரிவு பெண்- த. ஜெகசோதி, த. வசந்தா.

கட்டுரைப்போட்டி கீழ்ப் பிரிவு ஆண்- சு சண்முகரட்ணம், வி விஜயேந்திரா, [illegible] ரவீந்திரன், [illegible] ப. யோக நாதன், செ. கனகாம்பிகை.

பொது விவேகம் கீழ்ப் பிரிவு- சி. ஜனகராசா, எஸ், கோபிநாத், மத்திய பிரிவு- அ. சுசிலா, செ. சரஸ்வதி, மேற்பிரிவு- செ. மகேஸ்வரி, இ. சிறிதரன்.

சங்கீதப்போட்டி கீழ்ப் பிரிவு ஆண்- வி. விஜயேந்திரா, வி. குகதாசன், பெண்- த. வசந்தா, த. ஜெகசோதி, மத்திய பிரிவுபெண்- ம. கிருஷ்ணவேனி.

திருக்குறள் கீழ்ப்பிரிவு:- வி. விஜேந்திரா, மத்திய பிரிவு:- க. கலாநிதி, வி. கமலாதேவி. மேற்பிரிவு:- செ. கனகாம்பிகை.

வீட்டுத்தோட்டம் தா. மகேஸ்வரன், இ. ஸ்ரீதரன்.

[கா. நி]

## யாழ். சென்மேரிஸ் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு சாம்பியன் கோஷ்டியான சென் மேரிஸ் கோஷ்டிக்கும் வலிமேற்கு காரியாதிகாரி பிரிவு சம்பியன் கோஷ்டியான அராலி சில்வெஸ்டர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென் மேரிஸ் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றியீட்டியது.

வடஇலங்கை காரியாதிகாரி பிரிவு சாம்பியன் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்றுவரும் போட்டியில் இவ்வாட்டம் முதலாவதாகும். சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

போட்டி ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளும் மிகவும் உற்சாகமாக விளையாடின. சென்மேரிஸ் கோஷ்டி முன்னணி வீரர் திரு. நீ. விஜயன் மிகவும் துரிதமாகவும் நிதானமாகவும்இருகோலைப் போட்டார்.

சில்வெஸ்டர் கோஷ்டியைச் சேர்ந்த முன்னணி வீரர் திரு. புவனேந்திர ராஜன் ஒரு கோலைப் போட்டதைத் தொடர்ந்து சென் மேரீஸ் கோஷ்டியினைச் சேர்ந்த முன்னணி வீரர் திரு ப. அடைக்கலமும் மணியமும் இரு கோல்களை மாறிமாறிப் போட்டு தமது கோஷ்டி கோல்களின் எண்ணிக்கையை நாலாக்கினர்.

இப் போட்டிக்கு திரு. இராமநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(நி)

## தப்பி ஓடிய கைதி மீண்டும் கைது

கண்டி, ஞாயிறு

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த கைதி ஒருவர் சுகவீனம் காரணமாக கண்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின் திடீரெனக் காணமற்போய்விட்டார். இக்கைதியுடன் ஆஸ்பத்திரி சென்றிருந்த மற்றக் கைதிகள் தங்களில் ஒருவர் குறைவதைக் கண்டு தங்களோடு வந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து சிறைக் காவலர்கள் எடுத்துக் கொண்ட துரிதநடவடிக்கையால் தப்பி ஓடிய கைதி ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாவுள்ள ஹந்தானை என்னும் தேயிலைத் தோட்டத்தின் ஒற்றையடிப்பாதையொன்றில் ஓடக்கண்டு சிறைச்சாலை காவலர்களால் துரத்திச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டார்.

ஹினிமாத்தயா என்னும் இக்கைதி முன்புமொருதடவை கண்டி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பி ஓடி அன்றே கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

### யாழ். மத்தியகல்லூரி

1968-ம் ஆண்டு இரண்டாந்தவணை ஏப்ரல் மாதம் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். முன்பு அறிவித்தது போன்று ஏப்ரல் மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகாது.

அதிபர்.

628

## கேள்வி விளம்பரம்

### பெரியதம்பிரான் கோவில் ஒழுங்கை வேலை

மேற்படி வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 27-4-68 பிற்பகல் 3-00 மணிவரையும் புலோலிக் கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் தலைவருக்கு 29-4-68 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15.00-ம் கேள்விப்பிணைப் பணமாக ரூபா 100.00-ம் கட்டியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மற்றும் விபரங்களை எமது கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

க. வேலுப்பிள்ளை,
பதில் தலைவர்,
புலோலிக் கிராமசபை.

புலோலிக் கி. ச. கந்தோர்,
பருத்தித்துறை,
18-4-68. 636

## இடமாற்றம்

உடுவில், ஞாயிறு

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த பிபிலை அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு ஆ. அருளம்பலம் மேமாதம் முதலாம் திகதியிலிருந்து வவனியாப் பகுதியைச் சேர்ந்த மன்னகுளம் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தீவுப்பகுதிமக்கள் குறை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதியில் இ. போ. ச. அதிக கட்டணம் பிரயாணிகளிடமிருந்து அறவிடுவதாக பொதுமக்களிடையே அபிப்பிராயம் நிலவுகிறது. வேறு இடங்களிலும்பார்க்க இப்பகுதியில் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுவதுபற்றி ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லையாம். யாழ்ப்பாணத்திலிருந்து சுருவில் ஊடாக ஊர்காவற்றுறைக்கு செல்வதற்கு அறுபதுசதம் அறவிடப்படுகிறது. அதே பஸ்ஸில் புளியங்கூடல் சந்தியில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டுமானால் இருபத்தைந்துசதம்கொடுத்துச்செல்ல வேண்டும். இதேபோல் இரண்டரை மைல்கள்வரை செல்லும் பஸ் வண்டியில் இருபதுசதம் வரை வசூல் செய்யப்படுகிறதாம். வேறு பல இடங்களில் மூன்று மைல் பிரயாணம் செய்பவர்கள் பத்துச் சதத்துடன் பிரயாணம் செய்யும்போது தீவுப்பகுதியில் மூன்று மைல்களுக்கு இருபதுசதம் வசூல் செய்யப்பட்டு வருவதாகக் குறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலதிக ஊழியரை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பங்கு கொடுக்க அமைச்சு உத்தேசித்திருக்கும் திட்டம் முற்றாக மாற்றப்படவேண்டும். அவ்வாறு பங்கு கொடுத்தால் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதன் அர்த்தமே இல்லாது போய் மீண்டும் முதலாளித்துவமே தாண்டவமாடும் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

**விபத்துகளை தடுக்க**

குறிப்பிட்ட பாதையில் ஓடும் பஸ்ஸை அதேநேரத்தில் வேறு சிறு பாதைகளிலும் ஓடவிடுவதால் சாரதிகள் பஸ்ஸை வேகமாக ஓட்டிச் செல்வதாலேயே விபத்துக்கள் அதிகரிப்பதாகவும், இதனைத் தடுக்க உடனடி நடவடிக்கைகளை இ. போ. ச. தலைமைப் பீடம் எடுக்கவேண்டுமெனவும் விசாரணைக் குழுவினரை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர். இங்கு தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளும் வருமாறு:

மார்ச் மாதம் 19ந் திகதி இங்கு நடைபெற்ற பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் பற்றி உடன் விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

கோண்டாவில் பஸ் டிப்போவில் இடம்பெறும் ஊழல்களை விசாரணைசெய்ய ஒரு கமிஷன் நியமிப்பதோடு அக்கமிஷனில் அகில இலங்கைப் பொதுப் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

O மாவட்ட இ. போ. ச. ஆலோசனைக் குழுவொன்று வடபகுதிக்கு உடனடியாக அமைக்க வேண்டும்.

O பஸ் டிப்போ 'டைம் கீப்பர்கள்' தமது இஷ்டத்துக்கு பஸ்களை பாதைகள் மாறி ஓடச்செய்வதை சட்டமூலம் தடுக்கவேண்டும்.

O பஸ் நிலையத்தில் பொதுவான மணிக்கூடு ஒன்று அமைக்கப்படல்வேண்டும்.

O பஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பிரயாணிகளை மரியாதையாக நடாத்த சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் அளிப்பதுபோன்ற பயிற்சி வகுப்புகள் இவர்களுக்கும் அளிக்கவேண்டும்.

O இ. போ. ச. பஸ்விபத்தினால் மரணமடைந்தவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்குவதுடன், அது பற்றிய பகிரங்க விசாரணைகளும் உடனுக்குடன் நடாத்தவேண்டும்.

O தினசரி சேவையிலீடுபடும் பஸ்களை தப்புரவு செய்தே சேவைக்குவிட வேண்டும்.

O பஸ்கள் பழுதடைந்து வழியில் நின்றால் பிரயாணிகளுக்கு மிகுதிக் கட்டணம் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

கீரிமலையில் தினமும் இரவில் 18 பஸ்கள் தங்குவதால் அங்கு ஒரு பஸ் நிலையம் அமைக்கவேண்டுமென சண்டிலிப்பாய் - சேந்தாங்குளம் பஸ்பிரயாணிகள்சங்கத்தின் வேண்டுகோள் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாங்குளத்திலேயே வெளியூர் செல்லும் பஸ் சாரதிகள் மது அருந்துவதாகவும், இதனால் விபத்துக்கள் அதிகரிப்பதாகவும், அண்மையில் இதே பாதையில் ஒரு பஸ்ஸில் தேடுவாரின்றிக் கிடந்த 24 சாராயப்போத்தல்கள் கண்டெடுக்கப்பட்டதென விசாரணையில் தெரிவிக்கப்பட்டதை டிப்போ சுப்பிரின்டன் திரு. சுவாம்பிள்ளை ஏற்றுக்கொண்டார்.

இரு. இ. போ. ச. ஊழியர்களும் தென்யாழ்ப்பாண பஸ் பிரயாணிகள் சங்கத்தைச்சேர்ந்த திரு. சண்முகநாதனும் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் இரகசிய வாக்குமூலங்கள் கொடுத்தனர்.

பத்துக்கும் மேற்பட்ட பஸ் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள், தனிப்பட்டவர்கள், கல்லூரி அதிபர் பல் உட்படபலர் இங்கு சாட்சியமளித்தனர். வடபகுதி இ. போ.ச. பிராந்திய அதிபர் திரு. வேலுப்பிள்ளையும் இங்கு சமுகம் கொடுத்திருந்தார்,

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இவ்விசாரணை நேற்றுடன் முடிவடைந்தது. (ஈ. நி.)

## பல்கலைக்கழு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
இவ்விக்கிரகங்கள் கொண்டு செல்லப்படும்.

இவ்விக்கிரகங்கள் 29-ந் திகதி இரவு நல்லூர் சிவன் கோவிலிலும், 30-ந் திகதி இரவு கிளிநொச்சி முருகன் ஆலயத்திலும் மே 1-ந் திகதி இரவு அனுராதபுரம் கதிரேசன் கோவிலிலும், 2-ந் திகதி இரவு மாத்தளை விநாயகர் ஆலயத்திலும் தங்கிச் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 3-ந் திகதி காலை இங்கிருந்து விக்கிரகங்கள் கொண்டு செல்லப்பட்டு கண்டி கட்டுக்கலைப் பிள்ளையார் கோவிலில் வைத்து பூஜை செய்யப்படும்.

பேராதனை பல்கலைக்கழக முருகன் ஆலயத்தில் இவ்விக்கிரகங்கள் ஆனி மாதம் 6-ந் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [ஈ. நி]

## துறவுக்கு......

2-ம் பக்கத்தொடர்ச்சி
கடி வெளியூர்களில் பணி செய்கின்ற எனக்கு நித்திய பூசை சிரமமாயிருக்குமென்று சொன்னேன். "ஞானசாத்திரங்களை நிர்வாண தீட்சைபெற்று அன்றி படிக்கக்கூடாது என்னும் மரபை நீ அறிவாய். சிவபூசையை மட்டும் நீ பெற்றுக்கொள்வதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் இனி எந்த மேடையிலும் ஞானசாத்திரங்களை மேற்கோளாகச் சொல்லக்கூடாது" என்றார். அந்த உபதேசமே உடனடியாக யான் நிர்வாண தீட்சைபெறவும் பின்னர் உடையவர்பூசை, ஆசாரிய அபிஷேகம் முதலியன பெறவும் அதன் பயனாக இந்தியாவிலும், மலேசியா, வியட்னாம், பாங்காக், பர்மா. இலங்கை ஆகிய இடங்களிலும் பலருக்கு சிவதீட்சைகளை செய்து வைத்து அவர்கள் அனைவரையும் சைவாசாரம் உடையவர்களாக ஆக்கி வருவதற்கு துணையாக இருந்துவருகிறது.

அவர்களுடன் தொடர்ந்து தங்குவதற்குரிய வசதிகள் அடையாமையால் இடையிடையே பலசந்தர்ப்பங்களில் சமயசாத்திர விஷயங்களில் எனக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகள் அவர்கள் தங்கியிருக்குமிடங்களில் சந்தித்து தெளிவு செய்துகொள்வேன்.

கோவை சிவக்கவிமணி எனும் சம்பந்தசரணாலய தம்பிரான் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்துக்கு எழுதிவெளியிட்டுள்ள பேருரை முழுதும் சுவாமிகளின் திருநோக்கத்துக்கு இலக்காகி செப்பம் செய்யப்பெற்ற கையெழுத்துப் பிரதியின் அச்சுப் பிரதி என்பதை யாவரும் அறிதல்வேண்டும்.

சுவாமிகள் சூரியனார் கோவிலை விட்டு வெளியேறிய பிறகு] பெரும்பாலும் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாபநாசத்திலும் சிதம்பரத்திலும் தான் வசித்தார்கள் அவர்களைக் காணச் செல்பவர்களுக்கு அவர்கள் செய்த உபசாரம் அதனைப் பெற்றவர்களால் என்றும் மறக்க முடியாத தாயிருந்தது.

# ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]
திருநாளைப் பக்தியுடன் கொண்டாடுகின்றார்கள்.

சிதம்பரத்திலேயுள்ள அவரது சமாதியில் இன்று விசேஷ பூசையும் அன்னதானமும் நடக்கின்றது. அவரது துறவின் மகிமை உலகுக்கு அதிகம் தெரியும்போது இத்திருநாள் வரவர விசேஷமாக நடைபெறலாம்.

திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜசுவாமி சமாதி அடைந்தபின் பல வருடங்கள், ஒருசில சிஷ்யர்களே வந்து பூசை செய்துவிட்டுப் போவார்களாம். வேறு யாருக்கும் தெரியாது. இன்று இந்தவிழா எவ்வளவு சிறப்பாக நடக்கிறது. அதைப்போல் துறவின் எல்லையைக் கண்ட இந்தப்பெரியாரின் பெருமையை உணரும்போது இவர் திருநாள் விஷேசமாக நடக்கக்கூடுமல்லவா?

பெரியோர்களைப் பேணுவதால் நமக்கு நாமே நன்மை செய்து கொண்டவர்கள் ஆவோம்.

ஃ ஃ

இன்றுமாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர்மண்டபத்தில் ஸ்ரீ தத்புருஷதேசிகரின் "சித்தியார்வகுப்பு" ஆரம்பமாகிறது. அவர் ஒரு மாத காலமிருந்து இவ்வகுப்பை நடத்துவாரென்று தெரிகிறது.

ஃ ஃ

சங்கநிதி பதுமநிதி
இரண்டுந் தந்து
தரணி யொடுவானாளத்
தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம்
மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்த
ரல்லராகில்
அங்கமெலாம் குறைந்
தழுகு தொழு
நோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும்
புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்
தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம்
வணங்கும்கடவுளாரே.

—அப்பர் சுவாமிகள்.

[இறைவனோடு ஏகாந்த உறவுகொள்ளாதவர்கள், இருநிதியங்களையும் பெற்று மண்ணையும் விண்ணையும் ஆள்பவராயினும், அந்தச் செல்வச் சிறப்பெல்லாம் மங்கி அழியுமாதலால் அதை நாம் மதிக்கமாட்டோம். ஆனால் குஷ்ட நோயால் உடலெல்லாம் குறைந்து அழுகியிருப்பினும், மாட்டை உரித்துத் தின்னும் புலையர்களாயினும் அவர்கள் சிவபெருமானுக்கு அடியவராயின் அவர்களே யாம் வணங்கக்கூடிய கடவுளாவர்.]

## டில்லியில்...

(1-ம் பக்க தொடர்ச்சி)
திடீரென வந்தார். அவர் இந்திய ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் பிரதம மந்திரி திருமதி காந்தியுடன் ஒன்றரைமணிநேரம் ஆலோசனை நடத்தினார். பின்பு அவர் மாஸ்கோ புறப்பட்டார்.

வசாவிளான் கொலை வழக்கு:

# தடயப் பொருட்கள் பரிசோதனைக்கு போகும்

யாழ்பாணம், திங்கள் வசாவிளான் கொலை வழக்கு முதல்தடவையாக மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்தவரை பிரேத பரிசோதனை செய்த யாழ். மாவட்ட சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்து சாட்சியமளித்தார். எதிரி தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் வைத்தியஅதிகாரியை குறுக்குவிசாரணைசெய்தார்.

காங்கேசன் துறை பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் எஸ் வி. மூர்த்தி இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட தடயப்பொருட்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அரசாங்க இரசாயன பரிசோதகருக்கு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட விண்ணப்பித்தார். இவ்விண்ணப்பத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டு அனுமதியளித்தார். துப்பாக்கி, வெற்றுத்தோட்டாக்கள், இறந்தவரின் உடுப்பு உட்படவேறுசில பொருட்களும் தடயப்பொருட்களில் காணப்பட்டன.

காங்கேசன் துறைப் பொலிசார் இவ் வருடம் ஏப்ரல் மாதம் 9-ம் திகதி வசாவிளானைச் சேர்ந்த தம்பிமுத்து இராமு என்பவரைக் கொலைசெய்ததாக சுப்பிரமணியம் என்பவர் மீது குற்றம்சாட்டி இவ்வழக்கை தொடர்ந்துள்ளனர்.

தொடர்ந்து எதிரியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்தமாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரி தரப்பில் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ சி. புறக்டர்களான ஆர். ஜெ செல்வரத்தினம், சிவ சிறீதரன் ரி. தம்பிரத்தினம், உலகநாதன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

காங்கேசன் துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். விக்னேஸ்வரமூர்த்தி பொலிஸ்தரப்பில் வழக்கை நடத்தினார்.

## திருநாவுக்கரசர் குருபூஜை

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினமாகிய இன்று காலை 7 மணிக்குபக்த நால்வருக்கு விசேஷ அபிசேகமும் மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை பண்டிதர் ஸ்ரீமத் வ. மு இரத்தினேஸ்வர ஐயரால் 'திருநாவுக்கரசுநாயனார், என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும் இரவு 7 மணிக்கு நால்வர் உற்சவமும் பின் மஞ்சத்தில் சுவாமி உள்வீதி வலம் வருதலும் இரவு 8 மணிக்கு அர்த்த ஜாமப் பூசையும் நிகழும்.

ஃ

மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் இன்று மாலை 5 மணிக்கு திருநாவுக்கரசர் குருபூஜை நடைபெற இருக்கிறது. இங்கு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "அப்பர் காட்டிய வழி" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஃ ஃ

அரியாலை சைவத்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் ஆதரவில் அரியாலை ஸ்ரீபார்வதி தமிழ்கலவன் பாடசாலையில் இன்று திருநாவுக்ரசு நாயனார் குருபூசை கொண்டாடப்படும். பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சைவ மகாநாட்டிற் கலந்து கொள்வதற்காக வந்த சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் "அப்பரடிகளின் மெய்வாழ்க்கை பற்றி பேசுவார். பண்டிதர் மு. வேதநாயகம் தலைமையில் நிகழும் இக் குருபூசையில் இன்னும் பலர்பேசுவர்.

ஃ

சைவபரிபாலனசபைநாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 10—பி. பகல் 1-00 மணி வரை திருநாவுக்கரசு நாயனார் சிவபூஜையும் மாலை 7 மணிக்கு சொற்பொழிவும் நடைபெறும். வித்துவான் பி. ஏ. எஸ். ராஜசேகரன் திருமறை யோதுவார்.

## தேனுறு வெளியீடு

யாழ்ப்பாணம், திங்கள் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய தேனுறு என்ற கவிதைத் தொகுதியின்வெளியீட்டுவிழா இன்று மாலை யாழ்நகர மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ் இலக்கியவட்ட ஆதரவில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு கவிஞர் வி. கந்தவனம் தலைமை வகிப்பார். வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியீட்டுரையும் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை செ, கதிரவேற்பிள்ளை வித்துவான் பொன் முத்துக்குமாரன் கவிஞர் அம்பி ஆகியோர் ஆய்வுரையும் நிகழ்த்துவர்.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண ரசிகரஞ்சன சபாவின் 17-வது ஆண்டு இசைவிழாவின் 6-ம் நாள் நிகழ்ச்சி இன்று மாலை யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

மாலை 5-45 மணி ரசிகரஞ்சன சபா சங்கீதக்கல்லூரி மாணவர்கள் பாட்டு. 6-15 மணி தலைமையுரை, 6-30 மணி அளவெட்டி பாலகிருஷ்ணன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி, 8 மணி செல்வி இராசலட்சுமி கனகசபாபதி பாட்டு, 8 45 மணி செல்வி சரோஜினி இராசதுரை பாட்டு, 9-45 திருப்பாம் தில்லைராசா பாட்டு. [ஈ. நி]

## திருமணம்

திருமதி அரியரட்னம் அவர்களது ஏக புதல்வர் குலேந்திரன் (B. Sc.- Dip-in Ed) ஆசிரியர் யாழ். மத்தியகல்லூரி அவர்களுக்கும், திரு & திருமதி சிவசுப்பிரமணியம் அவர்களது புதல்வி ஞானு B. A. (Hons) ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி அவர்களுக்கும் கந்தர்மடம் பிள்ளையார் கோவிலில் வியாழக்கிழமை (25-4-68) காலை 11-45 மணிக்குத் திருமணம் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை. 1440

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிர்வாகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org